MAY 2024 **U/ID 30616/ULA1A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. பெ.சுந்தரனார் வெளியிட்ட நாடக நூல் எது? அது எந்த ஆண்டு வெளியிடப்பெற்றது?

2. கவிமணியின் படைப்புகளைக் குறிப்பிடுக.

3. இலக்கணக் குறிப்பு தருக: காலநதி.

4. கண்ணன் பாட்டின் கருப்பொருள் யாது?

5. கோது என்றால் என்ன?

6. கிறுக்கன், நாவல்பழம், மகாகாவியம் ஆகிய கவிதைகளைப் படைத்தவர் யார்?

7. மு.மேத்தாவின் இரு கண்களாகத் திகழ்வன எவையெவை?

8. தண்ணீர் தேசம் என்ற கவிதைப் படைப்பைத் தந்தவர் யார்?

9. திருநாவுக்கரசர் பாடிய பதிகங்களின் மொத்த எண்ணிக்கை?

10. குலசேகர ஆழ்வார் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.

11. கலம்பகத்தில் பாட்டுடைத் தலைவன் இறைவன் எனில் எத்தனைப் பாடல்களைப் பாடுவர்?

12. ஏறு ஊர் தியான் என அழைக்கப்படுவன் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. தமிழாகிய தெய்வப் பெண் என்று சுந்தரனார் உருவகம் செய்யுமாற்றை விளக்குக.

14. அகத்தியரின் பெருமைகளைப் பட்டியலிடுக.

15. வாழ்க்கைத் தத்துவங்களாகக் கவிமணி கூறுவனற்றைச் சுருக்கி எழுதுக.

16. சேவகன் பொய்யுரைத்தல் ஏன்? – விளக்குக.

17. கருப்பு மலர் கவிதையின் கருத்துக்களை எழுதுக.

18. அணிகலமாவது ஐந்தெழுத்து – எது? ஏன்?

19. நந்திக்கலம்பகப் பாட்டுடைத் தலைவனின் வீரச்சிறப்புகளைக் குறிப்பிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. தமிழ்மொழியின் சிறப்புகளாகப் பேராசிரியர் பெ.சுந்தரனார் கூறுவனவற்றை எழுதுக.

21. அழகின் சிரிப்பில் ஆல் என்னும் தலைப்பில் அமையும் இயற்கைக் காட்சிகளைக் காட்சிப்படுத்துக.

22. வெளிச்சம் வெளியே இல்லை என்ற கவிதையின் மையப் பொருண்மையினை விளக்குக.

23. தேவகியின் புலம்பல் எத்தகையது? பெருமாள் திருமொழி கூறுவனவற்றை விளக்கி உரைக்க.

24. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சிறப்புகளை முத்தொள்ளாயிரம் எங்ஙனம் எடுத்துரைக்கின்றன?

———————